செய்ய வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் யாரையும் காலி செய்ய வேண்டாமென்று உத்திரவு இட்டது மாத்திரமல்ல, உடனடியாக அவர்களுக்கு மாற்று இடங்களைத் தரவேண்டுமென்று ராணிப்பேட்டை கோட்டாட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப் பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, திரு. வகாப் அவர்கள் சுட்டிக்காட்டியது போல என்னிடத்திலும் முறையிட்டார்கள். நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை அவர்களுக்குப் பட்டா வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சரவர்கள் மாற்று இடம் தருகிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால் அதற்குள்ளாக அவர்களை உடனடியாகக் காலி செய்யுங்கள் என்று நோட்டீஸ் போய்க் கொண்டிருக்கின்றன. அவர்களை காலி செய்யுங்கள் என்று வற்புறுத்துகிறார்கள். ஆகவே, அவர்களை வற்புறுத்தாமல், அவர்களுக்கு மாற்று இடங்களைக் கொடுத்ததற்குப் பின்னால் அவர்களைக் காலி செய்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக அந்த இடத்தைப் பார்வையிட்டு உத்திரவு வழங்கப்படுகிற வரையில் அவர்களைக் காலி செய்ய வேண்டாமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Lands in Ekambarapuram village.

* 551 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether a large number of Kisans have applied for patta for the lands at Ekambarapuram in Ambasamudram area in Tirunelveli district in recent times; and

(*b*) if so, the action taken by the Government in this respect?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) பட்டா வேண்டி 15 உழவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.

1975 ஏப்ரல் 3]

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவரவர்களே, இந்த நிலங்கள் சம்பந்தமாக பல ஆண்டுகளாக பட்டா விசாரணை நடைபெற்று முடிவு பெறுமல் இருந்து கொண்டிருக்கிறது. 20—3—74-ல் உயர் நீதிமன்றத்தில் இந்த நிலங்கள் இனும் நிலங்கள் இல்லை, ரயத்து நிலங்கள் என்று குறிப்பிடப்பட்டதாகத் தெரிய வருகிறது. இதை மறு பரிசீலனை செய்து அப்பீல் செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? இந்த தீர்ப்பின் பிரகாரம் பட்டா கொடுப்பதற்கு அரசுக்கு வசதி இருக்கிறதா? விரைவில் பட்டா கொடுப்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, சென்னை உயர் நீதிமன்றம் 20—3—74 நாளிட்ட தனது தீர்ப்பில் கூறியுள்ளது. எனவே, திருவாவடுதுறை ஆதினத்திற்கு 1963-ம் ஆண்டு 30-வது சட்டத்தின் பிரிவின் கீழ் பட்டா வழங்கிய ஆணைகளை உயர் நீதிமன்றம் தள்ளி விட்டது. எனினும், திருவாவடுதுறை ஆதீனம் அல்லது குத்தகைக்காரர்கள் நிலங்கள் மீது பட்டா உரிமை பெற்றது குறித்து உயர் நீதிமன்றம் விளக்கம் ஏதும் தரவில்லை. எனவே, திருவாவடுதுறை ஆதீனத்தின் குத்தகைதாரர்கள் நிலத்தின் மீது தங்களுக்குள்ள உரிமையை நிலைநாட்ட சிவில் நீதி மன்றத்திலோ அல்லது வருவாய் நீதி மன்றத்திலோ தங்கள் கோரிக்கை குறித்து போராடுவது திருவாவடுதுறை ஆதீனக் குத்தகைக்காரர்களின் விருப்பம் என்று வருவாய் வாரியம் தெரிவித்துள்ளது. இது குறித்து சட்டத் துறையுடன் கலந்தாலோசித்து அரசு தனியே பரிசீலித்து வருகிறது.

சீரணித் தொண்டர்கள்.

*552 வினு—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சீரணியில் தொண்டாற்றும் சீரணி தொண்டர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, சீரணி அமைக்கப்பட்டு இதுவரையில் விலை மதிக்க முடியாத பணிகள் அந்த சீரணி ஆற்றி வருகிறது. அப்படி இருக்கையில் மேலும் இந்த சீரணியை விரிவடையச் செய்ய, இப்படிப்பட்ட நல்ல பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணு அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சீரணி மிகச் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. முதலாவது ஒரு மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இருந்து, இன்றையதினம் அதிலே 40 ஆயிரம் பேர்கள்வரை அந்தச் சீரணியில் சேர்ந்திருக்கிருர்கள். மேலும், அவர்கள் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அவர்கள் ஊதியம் கருதாது உழைப்பவர்கள் என்று கருதுவதாலே அவர்கள் வந்து சேருவார்களானல், அவர்களுக்கு வேண்டிய ஊக்கம் அளிக்கப்படும். எனவே, இப்பொழுது அந்த நிலைமை ஒன்றும் இல்லை.

சூளும்பேடு, இடைக்கழி நாடு ஊராட்சிகளைப் பிரித்தமைத்தல்..

* 553 வினு—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதியிலுள்ள சூளும்பேடு, இடைக்கழி நாடு பஞ்சாயத்துக்களைப் பிரித்து அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இடைக்கழி நாடு, சூளும்பேடு ஆகிய ஊராட்சிகளைப் பிரிப்பதற்கான செயற்குறிப்புகள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளன.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இது கடந்த 25 ஆண்டுகளாக இப்படியே சொல்லப்பட்டு வருகிறது. இந்த இடைக்கழி நாடு பஞ்சாயத்தில் 32 ஆயிரம் வாக்காளர்கள்